**1] மத்திய பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் UPSC (யு.பி.எஸ்.சி.) தலைவராக டேவிட் ஆர்.ஷியாம்லே நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

- ✓ மத்திய பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் (யு.பி.எஸ்.சி.) தலைவரான அல்கா சிரோஹியின் பதவிக்காலம் (ஜனவரி 3) முடிகிறது. எனவே, புதிய தலைவராக டேவிட் ஆர்.ஷியாம்லே நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பிறப்பித்துள்ளார்.

**2] 2017-ம் ஆண்டின் முதல் குழந்தை சரியாக 00.01 மணிக்கு பிரிட்டன் நாட்டில் பிறந்துள்ளது.**

- ✓ நியூசிலாந்து நாடு முதன்முதலில் புத்தாண்டை வரவேற்றது உட்பட பல்வேறு சுவாரசியங்களுடன் பிறந்த இந்த ஆண்டை உலகம் முழுவதும் உள்ள மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றனர்.
- ✓ அந்த வரிசையில் மற்றுமொரு சுவாரசியமாக இந்த ஆண்டின் முதல் குழந்தை பிரிட்டன் நாட்டில் பிறந்துள்ளது. பிரிட்டன் நாட்டை சேர்ந்த பாரதி தேவி-அஷ்வானி குமார் தம்பதியருக்கு 00.01 மணிக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது. 2.72 கிலோ எடையுடன் பிறந்த இந்த குழந்தைக்கு பெற்றோர் எல்லினா குமாரி என பெயர் வைத்துள்ளனர்.

**3] கிர்கிஸ்தான் ராணுவ தளபதியாக இந்திய வம்சாவளி தொழிலதிபர் நியமனம்**

- ✓ இந்தியாவின் கேரள மாநிலம் கோழிக்கோட்டைச் சேர்ந்தர் ஷேக் ரபிக் முகமது. ஆரம்பக் கல்வி மட்டுமே முடித்த இவர் இளம் வயதிலேயே மும்பை சென்று வேலை செய்து பல்வேறு தொழில் நுணுக்கங்களை கற்றுள்ளார். பின்னர் அங்கிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளார். சவுதி, ஈரான்,

ஐக்கிய அரபு அமீரகம், கிர்கிஸ்தான் ஆகிய நாடுகளில் தொழில் செய்தார். அவரது குடும்பம் துபாயில் வசிக்கிறது.

- ✓ இந்நிலையில், கிர்கிஸ்தான் நாட்டு ராணுவ மேஜர் ஜெனரலாக ஷேயிக் ரபீக் முகமது நியமிக்கப்பட்டுள்ளார். அவரை பாதுகாப்புத்துறை மந்திரி அலி மிர்சா நியமித்திருப்பதாக கலீஜ் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

**4] பாகிஸ்தானின் ஏவுகணை திட்டத்தில் தொடர்புள்ள 7 நிறுவனங்கள் மீது அமெரிக்கா அதிரடியாக பொருளாதார தடை விதித்துள்ளது.**

- ✓ லாகூர் அஹாத் இன்டர்நேஷனல், வாஹ் கண்டோன்மென்ட் ஏர் வெப்பன்ஸ் காம்பிளக்ஸ், இஸ்லாமாபாத் என்ஜினீயரிங் சொல்யூசன்ஸ், கராச்சி மெரிடைம் டெக்னாலஜி காம்ப்ளக்ஸ், இஸ்லாமாபாத் நேஷனல் என்ஜினீயரிங் அன்ட் சயின்டிபிக் கமிஷன், ராவல்பிண்டி நியூ ஆட்டோ என்ஜினீயரிங், சட்டார் யுனிவர்சல் டூலிங் சர்வீசஸ் ஆகியவை ஆகும். இந்த நிறுவனங்கள் மீது பொருளாதார தடை விதித்து, அமெரிக்க வர்த்தக துறை அறிவிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

- ✓ அதில், "அமெரிக்க தேசிய பாதுகாப்பு அல்லது வெளிநாட்டு கொள்கை நலன்களுக்கு மாறாக செயல்படுவதாக கருதி, பாகிஸ்தானின் 7 நிறுவனங்கள் ஏற்றுமதி நிர்வாக கட்டுப்பாட்டு ஒழுங்குமுறையின்கீழ் கொண்டு வரப்படுகின்றன" என கூறப்பட்டுள்ளது.

- ✓ இந்த 7 நிறுவனங்களும் 'இயர்' என்றழைக்கப்படுகிற (அமெரிக்க) நிர்வாக கட்டுப்பாட்டு ஒழுங்குமுறையின்கீழ் அனைத்து பொருட்களுக்கும் உரிமம் பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**5] அப்துல் கலாம் தீவில் இருந்து இன்று அக்னி-4 ஏவுகணை இன்று [ 02.01.2017 ] வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.**

- ✓ இந்திய பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் 1.5 டன் எடையை சுமந்துச் செல்லக்கூடிய வகையில் 17 மீட்டர் நீளம் கொண்ட ‘அக்னி-4' ரக ஏவுகணைகளை தயாரித்து வருகிறது.

- ✓ அணு ஆயுதங்களை தாங்கிச் சென்று எதிரிகளின் இலக்குகளை அழிக்கும் இந்த 'அக்னி-4' ஏவுகணைகள் சுமார் 4 ஆயிரம் கிலோமீட்டர் தூரம்வரை, கண்டம்விட்டு கண்டம் பாய்ந்துச் சென்று தாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

- ✓ இந்நிலையில், ஒடிசா மாநிலத்தில் உள்ள பலசோர் கடற்கரை பகுதியை ஒட்டியுள்ள அப்துல் கலாம் தீவில் (பழைய பெயர் வீலர் தீவு) இருந்து இன்று [2.1.2017 ] பகல் 12 மணியளவில் 'அக்னி-4' ஏவுகணை பரிசோதித்து பார்க்கப்பட்டது.

- ✓ இந்த சோதனை வெற்றிகரமாக அமைந்ததாகவும், நிர்ணயிக்கப்பட்டிருந்த இலக்கை குறிதவறாமல் 'அக்னி-4' பாய்ந்து தாக்கி, அழித்ததாகவும் தெரியவந்துள்ளது.

### 6] மதம், நிறம், சாதி, சமூகம் மற்றும் மொழியின் அடிப்படையில் மக்களிடம் வேட்பாளர்கள் ஓட்டு வேட்டையாட கூடாது என சுப்ரீம் கோர்ட் அறிவித்துள்ளது.

- ✓ பாராளுமன்றம் மற்றும் சட்டசபைகளுக்கு தேர்தல் நடத்தப்படும் போது ஜாதி, மதம்தான் முக்கிய அம்சமாகப் பார்க்கப்படும் நிலை உள்ளது. சமீபகால தேர்தல்களில் பிரசாரம் உள்ளிட்ட அனைத்து விஷயங்களிலும் ஜாதி, மதமே முன்னிலைப்படுத்தப்படுகிறது.

- ✓ குறிப்பாக இந்துத்துவா பெயரில் அரசியல் நடப்பதாக குற்றச்சாட்டுக்கள் கூறப்படுகிறது. அரசியலையும், மதத்தையும் ஒன்றாக கலக்கக் கூடாது. அதற்கு தடை விதிக்க வேண்டும் என்று கடந்த சில ஆண்டுகளாக கோர்ட்டுகளில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

- ✓ சுப்ரீம் கோர்ட்டு சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வழக்கில் அளித்த தீர்ப்பில், “இந்து மதம் என்பது வாழ்க்கைக்கான பாதை. அதன் பேரில் அரசியல் நடத்துவதில் தவறு இல்லை” என்று கூறி இருந்தது. அந்த தீர்ப்பை மாற்ற கோரியும் வழக்கு தொடரப்பட்டது.

- ✓ இந்துத்துவா தொடர்பான இந்த வழக்கு விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் நடந்து வந்தது. மதத்தின் பெயரால் ஓட்டு கேட்பது மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 123-வது பிரிவின்படி ஊழல் போன்றதா என்ற கேள்வியின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டது.

- ✓ தலைமை நீதிபதி தாக்கூர் தலைமையில் 7 நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் இதை விசாரித்து இன்று [ 02.01.2017 ] இறுதி தீர்ப்பு வெளியானது. 7 நீதிபதிகளில் தலைமை நீதிபதி டி.எஸ்.தாக்கூர், நீதிபதிகள் லோகுர், பாப்டி, எல்.என்.ராவ் ஆகிய 4 பேரும் அரசியலில் மதம் கலக்கக் கூடாது என்று கருத்து தெரிவித்தனர். மற்ற 3 நீதிபதிகளான ஏ.கே.கோயல், யூ.யூ.லலித், சந்திரசூட் ஆகியோர் மாறுபட்ட கருத்து தெரிவித்திருந்தனர்.

- ✓ பெரும்பாலான நீதிபதிகள் ஆதரவு காரணமாக, இனி ஜாதி, மதத்தை பயன்படுத்தி ஓட்டு கேட்க கூடாது என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அதிரடி தீர்ப்பை சுப்ரீம்கோர்ட்டு இன்று [ 02.01.2017 ] வெளியிட்டது.

## 7] பூமி சுழற்சி வேகத்தை ஈடுகட்ட இந்திய நேரத்தில் கூடுதலாக ஒரு வினாடி சேர்ப்பு

- ✓ பூமியின் சுழற்சி வேகம் குறைகிறபோது அதை ஈடுகட்டுவதற்கு கடிகாரத்தில் ஒரு வினாடி கூட்டுவது இயல்பான ஒன்று. அந்த வகையில், இப்போது பூமியின் சுழற்சி வேகம் குறைந்துள்ள நிலையில், டெல்லியில் உள்ள தேசிய இயற்பியல் ஆய்வகத்தில் உள்ள அணு கடிகாரத்தில், நேற்று முன்தினம் இரவு 11 மணி 59 நிமிடம் 59 வினாடிகள் ஆனபோது, ஒரு வினாடி கூடுதலாக சேர்க்கப்பட்டு புதிய ஆண்டு பிறந்தது.

- ✓ இது தினசரி வாழ்க்கையில் மெல்லிய தாக்கத்தை உண்டுபண்ணினாலும், செயற்கைக்கோள் ஊடுருவல், வானியல் மற்றும் தொலை தொடர்பியல் துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது. அணு கடிகாரத்தில் ஒரு வினாடியை அதிகரித்து, மாற்றம் செய்ததை இந்திய நேரத்தில் பிரதிபலிக்கிற வகையில், காலை 5 மணி 29 நிமிடம் 59 வினாடியின்போது கூடுதலாக ஒரு வினாடி சேர்க்கப்பட்டது.

- ✓ இதுபற்றி தேசிய இயற்பியல் ஆய்வகத்தின் இயக்குனர் டி.கே. அஸ்வால் கூறும்போது, "பூமி அதன் சொந்த அச்சில் சுழல்வது ஒழுங்கான ஒன்றல்ல. சில நேரங்களில் அது வேகமாகவும், சில நேரங்களில் மெதுவாகவும் இருக்கும். இதற்கு நில நடுக்கம், நிலவின் ஈர்ப்பு சக்திகளால் அடிக்கடி ஏற்படும் கடல் அலைகள் என பல காரணங்களை சொல்லலாம்" என்றார்.

- ✓ "முடிவில் யு.டி.ஐ. என்னும் வானியல் நேரம் படிப்படியாக குறையும். அது யு.டி.சி. என்னும் அணு நேரத்துடன் ஒத்துப்போகாது. வானியல் நேரமும், அணு நேரமும் மாறுபடுகிறபோது, அது 0.9 வினாடியாக இருக்கிறபோது, உலகளவில் அணு கடிகாரங்கள் மூலம் கூடுதலாக ஒரு வினாடி வானியல் நேரத்தில் சேர்க்கப்படும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

- ✓ இந்திய கடிகாரத்தில் ஒரு வினாடி கூடுதலாக சேர்ப்பதை அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி கவுன்சிலின் கீழ் செயல்படுகிற தேசிய இயற்பியல் ஆய்வகம் செய்யும். இந்த ஆய்வுக்கூடம்தான் நேற்று இந்திய நேரம் காலை 5 மணி 29 நிமிடம் 59 வினாடி ஆனபோது ஒரு வினாடி கூடுதலாக சேர்த்தது. இந்த ஒரு வினாடி லீப் வினாடி என்று அழைக்கப்படுகிறது.

- ✓ 1972-ம் ஆண்டில் இருந்து இதுவரை 6 மாதம் முதல் 7 வருடங்கள் வரையிலான இடைவெளியில் 36 லீப் வினாடிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**8] தாக்குதல் நடத்த தடை செய்யப்பட்ட அணு உற்பத்தி நிலையங்களின் பட்டியல்: பாகிஸ்தானிடம் இந்தியா அளித்தது.**

- ✓ தாக்குதல் நடத்த தடை செய்யப்பட்ட அணு உற்பத்தி நிலையங்களின் பட்டியலை பாகிஸ்தான் அரசிடம் இன்று இந்தியா அளித்துள்ளது. இதேபோன்றதொரு பட்டியலை இந்தியாவிடம் பாகிஸ்தானும் சமர்ப்பித்துள்ளது.

- ✓ இந்தியாவும், பாகிஸ்தானும் கடந்த 31-12-1988 அன்று உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்டனர். அதன்படி, இருநாடுகளும் நிறுவியுள்ள அணு உற்பத்தி நிலையங்களின் பட்டியலை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ள வேண்டும்.

- ✓ அந்த இடங்கள் யாவும் தாக்குதலில் இருந்து தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட வேண்டும் என அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதையடுத்து, 1991-ம் ஆண்டில் இருந்து ஆண்டுதோறும் ஜனவரி மாதம் முதல்தேதியன்று தங்கள் நாட்டில் உள்ள அணு உற்பத்தி நிலையங்களின் பட்டியலை இருநாட்டு தூதரகங்களும் பரிமாறிக் கொள்கின்றன.

- ✓ அவ்வகையில், தொடர்ந்து 26-வது ஆண்டாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாட்டில் உள்ள அணு உற்பத்தி நிலையங்களின் பட்டியலை இருநாட்டு தூதரகங்களும் இன்று பரிமாறிக் கொண்டன.

### 9] இந்திய ராணுவத்தின் புதிய தளபதியாக பிபின் ராவத் பதவி ஏற்றார்.

- ✓ இந்திய ராணுவ தளபதியாக இருந்து வந்த தல்பீர் சிங் சுஹாக், பணி நிறைவு செய்தார். புதிய ராணுவ தளபதியாக ஜெனரல் பிபின் ராவத் நியமிக்கப்பட்டார்.

- ✓ இந்திய ராணுவத்தின் 27-வது தளபதியாக பிபின் ராவத், டெல்லி தெற்கு பிளாக்கில் உள்ள அலுவலகத்தில் முறைப்படி பதவி ஏற்றார். அவரிடம் பணி நிறைவு செய்த தல்பீர் சிங் சுஹாக் கோலினை வழங்கி, பொறுப்பை ஒப்படைத்தார்.

- ✓ 13 லட்சம் வீரர்களை கொண்ட இந்திய ராணுவத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்றுள்ள பிபின் ராவத் உத்தரகாண்ட் மாநிலத்தை சேர்ந்தவர்.

## 10] My Favorite Fanatics of 2016 - Bill Gates

- ✓ மைக்ரோசாப்ட் நிறுவனர் பில் கேட்ஸ், 2016ம் ஆண்டில் தனக்கு மிகவும் பிடித்தமானவர்கள் / உத்வேகமானவர்கள் என 5 நபர்கள் கொண்ட பட்டியலை வெளியிட்டுள்ளார்.
- ✓ இதில் இன்போசிஸ் நிறுவனத்தை உருவாக்கியவர்களில் ஒருவரான நந்தன் நிலகேனி பெயரும் இடம் பெற்றுள்ளது.

- ✓ Jimmy Carter
- ✓ Nate Bowling
- ✓ Nandan Nilekani
- ✓ Dr. Ana Mari Cauce
- ✓ Ken Caldeira

## 11] Beer Mile Run

- ✓ இந்தியாவின் முதல் Beer Mile Run போட்டி , பெங்களூருவில் ஜனவரி 15ல் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் குறிப்பிட்ட அளவு பீர் அருந்தியபின் கால் மைல் தூரம் ஓட வேண்டும். பின் மீண்டும் பீர் அருந்தியபின் கால் மைல் தூரம் ஓட வேண்டும். இதே போன்று 4 முறை பீர் அருந்தி ஒரு மைல் தூரம் ஓட வேண்டும்.

## 12] 22 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு சீனாவின் யுவான் மதிப்பு சரிவு

- ✓ அமெரிக்காவின் டாலருக்கு நிகரான சீனாவின் யுவான் மதிப்பு தற்போது 6.95 ஆக உள்ளது. சீன பங்குச்சந்தை கடந்த ஆண்டில் பெரும் சரிவு கண்டுள்ளது. அமெரிக்க டாலருக்கு எதிரான யுவான் மதிப்பு தொடர்ச்சியாக சரிந்து வந்தது.

- ✓ இந்நிலையில், 22 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அமெரிக்காவிற்கு எதிரான சீன யுவான் மதிப்பு கடும் சரிவை கண்டுள்ளது. சீனா தனது அந்நிய செலாவணி வர்த்தகத்தில் அமெரிக்க டாலரின் பங்களிப்பை குறைத்துள்ளது. அமெரிக்க டாலருக்கு நிகரான சீன யுவான் மதிப்பு கடந்த ஆண்டு 7 சதவீதம் அளவிற்கு சரிந்துள்ளது. ஆசிய நாடுகளில் உள்ள அனைத்து நாடுகளின் கரன்சியில் சீனா பெரும் பின்னடைவை சந்தித்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளது.

- ✓ அந்நிய செலவாணி வர்த்தகத்தில் அமெரிக்க டாலரின் பங்களிப்பை 26.4 சதவீதத்தில் இருந்து 22.4 ஆக குறைத்துள்ளது. சீன யுவானை மதிப்பிடுவதற்குப் கூடுதலாக 11 கரன்சிகள் இணைக்கப்பட்டுள்ளது. முன்னதாக சீன கரன்சியை தீர்மானிப்பதில் 13 நாடுகள் மட்டுமே பங்கெடுத்து வந்தது.

- ✓ 2017-ம் ஆண்டு முதல் சீன யுவான் மதிப்பை தீர்மானிப்பதில் 24 நாடுகளின் கரன்சிகளாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக சீன அந்நிய செலாவணி வர்த்தக மையம் டிசம்பர் 29-ம் தேதி அறிவித்தது.

## 13] 103 செயற்கைகோளுடன் விண்ணில் பாய தயாராகும் பி.எஸ்.எல்.வி. சி-37 ராக்கெட்

- ✓ இஸ்ரோ வெளிநாடுகளில் தயாரிக்கப்படும் செயற்கைகோள்களை, இஸ்ரோவின் வணிகக் கிளையான ‘ஆண்டிரிக்ஸ்’ நிறுவனம் மூலம் பெற்று, அதற்குரிய கட்டணத்தை அந்தந்த நாடுகளில் இருந்து பெற்றுக்கொண்டு செயற்கைகோள்களை விண்ணில் செலுத்தி வருகிறது.

- ✓ குறிப்பாக கடந்த 1994-ம் ஆண்டு முதல் 2016-ம் ஆண்டு வரை இஸ்ரோ பல்வேறு ராக்கெட்டுகள் மூலம் 121 செயற்கைகோள்களை விண்ணில் செலுத்தி இருக்கிறது. இதில் 21 நாடுகளைச் சேர்ந்த 51 நிறுவனங்களுக்கு

சொந்தமான 79 வெளிநாட்டு செயற்கைகோள்களும், உள்நாட்டைச் சேர்ந்த 42 செயற்கைகோள்களும் ஆகும். இவற்றை இஸ்ரோ வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தி உள்ளது.

- ✓ இதைத் தொடர்ந்து தற்போது 103 செயற்கைகோள்களை ஒரே ராக்கெட்டில் செலுத்தி விண்ணில் நிலை நிறுத்துவதற்கான பணியில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தீவிரமாக களம் இறங்கி உள்ளனர். வெவ்வேறு நாடுகளை சேர்ந்த செயற்கைகோள்களை வணிக ரீதியில் விண்ணில் செலுத்துவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்யப்பட்டு இருக்கிறது.

- ✓ இதுகுறித்து ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மைய இயக்குனர் பி.குன்னில் கிருஷ்ணன் கூறியதாவது:- இஸ்ரோவை பொறுத்தவரை விண்ணில் செலுத்தப்படும் ஒவ்வொரு ராக்கெட்டுகளும் மிகவும் முக்கியமானது. அந்தவகையில் பி.எஸ்.எல்.வி. சி-37 ராக்கெட், வருகிற 27-ந் தேதி (வெள்ளிக்கிழமை) விண்ணில் ஏவப்படுகிறது. இதில் பொருத்தப்பட்டுள்ள செயற்கைகோள்கள் பெரும்பாலும் 'நானோ' வகை செயற்கைகோள்களாகும்.

- ✓ அனைத்து செயற்கைகோள்களும் ஒரே சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தும் சவாலை சந்திக்க வேண்டி உள்ளது. இதற்கு பி.எஸ்.எல்.வி. எக்ஸ்.எல் வகை ராக்கெட் பயன்படுத்தப்படுகிறது. ராக்கெட்டின் என்ஜினை நிறுத்திவிட்டு, மீண்டும் இயக்குவதற்கான நடவடிக்கைகள் இருக்காது. ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையில் செயற்கைகோள்களை விண்ணில் செலுத்த இருப்பது இதுவே முதன் முறையாகும். இதை வெற்றிகரமாக நிகழ்த்தினால் இதுபோல உலக சாதனையை படைத்த பெருமையை இஸ்ரோ பெறும்.

- ✓ இந்த ஆண்டு ஏவப்படும் முதல் ராக்கெட் இதுவாகும். இந்த ராக்கெட்டில், வானிலையை துல்லியமாக கணித்து கூறும் கார்ட்டோ சாட்-2டி உள்ளிட்ட 103 செயற்கைகோள்களை பொருத்தும் பணி நடந்து வருகிறது. மற்ற அனைத்து செயற்கைகோள்களும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வணிக ரீதியிலானவை.

- ✓ வருகிற JANUARY 27-ந் தேதி ஏவப்படும் பி.எஸ்.எல்.வி. சி-37 ராக்கெட்டுடன் சேர்த்து நடப்பாண்டின் முதல் காலாண்டில் 4 ராக்கெட்டுகளை விண்ணில்

செலுத்த திட்டமிட்டு இருக்கிறோம். குறிப்பாக 3.2 டன் எடைகொண்ட ஜி.எஸ்.எல்.வி. மார்க்-3 ராக்கெட் ஜி-சாட். 19-இ செயற்கைகோளை தாங்கி செல்ல உள்ளது. தொடர்ந்து ஜி.எஸ்.எல்.வி. மார்க்-1 ராக்கெட்டும், வருகிற மார்ச் மாத இறுதியில் பி.எஸ்.எல்.வி. சி-38 ராக்கெட்டும் விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

**14] 104-வது இந்திய அறிவியல் மாநாடு திருப்பதியில் [ஆந்திர மாநிலம் திருப்பதியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தில் ] செவ்வாய்க்கிழமை [ 03.01.2017 ] தொடங்குகிறது. நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் முன்னிலையில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.**

- ✓ இந்த ஆண்டு மாநாட்டின் மையக் கரு:- **தேசிய மேம்பாட்டிற்கு அறிவியல் தொழில்நுட்பம் ['Science and Technology for National Development' ]** என்பதாகும். மாநாட்டை தொடங்கி வைத்தபின் பிரதமர் நரேந்திர மோடி, 50 புகழ்பெற்ற விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடுகிறார். இதில் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளும் இடம்பெறுகின்றனர். அவர்களை பிரதமர் கவுரவிக்கிறார்.

**15] பிரிட்டனில் இந்தியருக்கு 'சர்' பட்டம்**

- ✓ பிரிட்டனில் பல்வேறு துறைகளில் சாதனை புரியும் அல்லது நாட்டுக்காக சேவை செய்யும் தனி நபர்களுக்கு அந்நாட்டு மன்னர் அல்லது ராணியால் 'சர் ' பட்டம் (நைட்ஹுட்) வழங்கப்படுகிறது. இதைப் பெற்றவர்கள், தங்கள் பெயருக்கு முன்பு 'திரு' என்பதற்கு பதில் 'சர்' என போட்டுக்கொள்ளலாம்.

- ✓ இதன்படி, பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு 'சர்' பட்டத்தை ராணி 2-ம் எலிசபெத் வழங்கினார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வேதியியல் பேராசிரியரும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மரபணு (டிஎன்ஏ) நிபுணருமான சங்கர் பாலசுப்ரமணியனுக்கு (50) இந்த பட்டம் வழங்கப்பட்டது.

- ✓ மேலும் ஹர்திப் சிங் பெகோல் (கல்வித் துறை), பேராசிரியர் கமல்தீப் சிங் பூய் (மனநல ஆராய்ச்சி) உள்ளிட்ட மேலும் பல இந்தியர்களும் இந்தப் பட்டம் பெற்றவர்கள் பட்டியலில் இடம்பிடித்தனர்.

### 16] அருணாச்சல பிரதேசத்தின் புதிய முதல்வராகிறார் தகம் பாரியோ

- ✓ அருணாச்சல பிரதேச முதல்வர் பேமா காண்டு மற்றும் 5 எம்எல்ஏக் கள் அருணாச்சல் மக்கள் கட்சியில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட் டதை அடுத்து, மாநிலத்தின் புதிய முதல்வராக தகம் பாரியோ பொறுப்பேற்க உள்ளார்.

### 17] உலகின் மிக உயரமான போக்குவரத்து பாலம்: சீனா திறப்பு

- ✓ சீனாவின் இரு மலைப்பிரதேச மாகாணங்களை இணைக்கும் உலகின் மிக உயரமான பாலம் ஒன்றை போக்குவரத்துக்காக வியாழனன்று திறக்கப்பட்டது.
- ✓ இதனால் 4 மணிநேரம் எடுக்கும் பயணம் 1 மணி நேரமாக குறையும். நதியின் மீது கட்டப்பட்டுள்ள இந்த பெய்பஞ்சியாங் பாலம் 565 மீட்டர்கள், அதாவது 1,854 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. யுனான் மாகாணத்தின் ஸுனாவேய் மற்றும் குயுஸூ மாகாணத்தின் ஷுய்செங் மலைப்பகுதிகளை இந்தப் பாலம் இணைக்கிறது.

### 18] சீனாவில் உலகின் மிக நீளமான புல்லட் ரயில் பாதை தொடக்கம்

- ✓ சீனாவில் கிழக்கு கடற்கரை பகுதியையும் தென்மேற்கு பகுதியையும் இணைக்கும் உலகின் மிக நீளமான ரயில் பாதை தொடங்கப்பட்டுள்ளது.

- ✓ உலகில் மக்கள்தொகை அதிகம் உள்ள நாடான சீனாவில் அதற்கேற்ப உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன. குறிப்பாக மக்கள் போக்குவரத் துக்கு அதிவேகமான புல்லட் ரயில்கள் இயக்கப்படுகின்றன. அதன் அடுத்தகட்டமாக மிகவும் வளர்ச்சி அடைந்த கிழக்கு கடற் கரை பகுதியையும் வளர்ச்சி குறைந்த தென் மேற்கு பகுதியை யும் இணைக்கும் வகையில் அதிவேகமான புல்லட் ரயில் பாதை தொடங்கப்பட்டுள்ளது.

- ✓ ஷாங்காய் - குன்மிங் இடையே 2,252 கி.மீ. தூரத்துக்கு இந்த ரயில் பாதை தொடங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ரயில் பாதை ஜிஜியாங், ஜியாங்ஸி, ஹூனான், குய்ஸோ, யுனான் ஆகிய 5 மாகாணங்களை இணைக்கிறது. தற்போது ஷாங்காயில் இருந்து குன்மிங் வரை செல்ல 34 மணி நேரம் ஆகிறது. இந்த புதிய புல்லட் ரயில் பாதையில் 11 மணி நேரமாக குறைந்துள்ளது என்று சீனா ரயில்வே கார்ப்பரேஷன் தகவல் வெளியிட்டுள்ளது.

- ✓ இந்த ரயில் மணிக்கு அதிகபட்சமாக 330 கி.மீ. வேகத்தில் இயக்கப்படுகிறது. சீனாவிலேயே கிழக்கு - மேற்கு பிராந்தியத்தை இணைக்கும் மிக நீளமான ரயில் பாதை இது.

## 19] டென்னிஸ் போட்டிகளில் இருந்து சோம்தேவ் ஓய்வு

- ✓ இந்திய டென்னிஸ் நட்சத்திர வீரரான சோம்தேவ் தேவ்வர்மன் தொழில்முறை டென்னிஸ் போட்டி களில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

- ✓ இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டர் பதிவில், "2017-ம் ஆண்டை புதிய குறிப்புகளுடன் தொடங்கும் விதமாக தொழில்முறை டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறு கிறேன். இத்தனை ஆண்டுகளாக என்னை நேசித்தவர்களுக்கும், ஆதரவு அளித்தவர்களுக்கும் நன்றி" என தெரிவித்துள்ளார்.

## 20] டிஜிட்டல் பரிவர்த்தனையை எளிதாக்க புதிய செயலி: பிரதமர் மோடி அறிமுகப்படுத்தினார்.

- ✓ மொபைல் போன் மூலமாக பணப் பரிவர்த்தனைகளை மேற்கொள் ளும் வகையில் புதிய செயலியை மத்திய அரசு அறிமுகப் படுத்தியுள்ளது. ஆதார் எண்ணை மையமாக வைத்து `பாரத் இண்டர் பேஸ் பார் மணி (BHIM)' என்ற இந்த புதிய செயலி செயல்படும்.
- ✓ தற்போது அறிமுகப்படுத்தப் பட்டுள்ள பிஹெச்ஐஎம் செயலியை சிறு வர்த்தகர்கள், பழங்குடி மக்கள், விவசாயிகள் என அனைவரும் பயன்படுத்த முடியும். தலித் மக்கள் முன்னேற்றதிற்காக உழைத்த பீம ராவ் அம்பேத்கர் நினைவாகத்தான் இந்த செயலிக்கு பீம்(BHIM) என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஏழைகளை முன்னேற்றுவதற்காக உழைப்பதுதான் அம்பேத்கரின் தாரக மந்திரமாக இருந்தது. மிகப் பெரிய தொழில்நுட்பத்திலான இந்த புதிய செயலி ஏழைகளை முன்னேற்றும்.

## 21] இந்திய - வங்கதேச எல்லையில் 'லேசர்' சுவர் அமைக்க திட்டம்

- ✓ இந்தியா - வங்கதேச எல்லையில் ஊடுருவல் நடப்பதை தடுக்க, 'லேசர்' சுவர், அதிநவீன, 'சென்சார்'களை நிறுவ, திட்டமிடப்பட்டு உள்ளது.

### எல்லையில் ஊடுருவல்:

- ✓ வங்கதேசத்தில் இருந்து லட்சக்கணக்கானோர், இந்தியாவுக்குள் ஊடுருவி வருகின்றனர். இந்தியா - வங்கதேச எல்லையின் பல பகுதிகளில் குறுக்கிடும் நதிகள், ஊடுருவலை தடுப்பதில் முட்டுக்கட்டையாக உள்ளன. அப்பகுதிகளில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படாததால், ஊடுருவலை தடுப்பது சிரமமாக உள்ளது.

**லேசர் சுவர்:**

- ✓ வங்கதேச எல்லையில் நதிகள் பாயும் பகுதிகளிலும், கடினமான நிலப் பரப்புகளிலும் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வது சிரமமாக உள்ளது. இப்பிரச்னைக்கு தீர்வாக, இப்பகுதிகளில் லேசர் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சுவர் அமைக்கவும், சென்சார் கருவிகளை பொருத்தவும் திட்டமிடப்பட்டு உள்ளது. அவசர நடவடிக்கையாக, இப்பணிகள் விரைவில் நிறைவேற்றப்படும்.

**22] ஐ.நா.,வின் புதிய பொதுச்செயலராக கட்டரெஸ் பொறுப்பேற்பு; விடைபெற்றார் பான் கீ மூன்**

- ✓ ஐ.நா.,வின் புதிய பொதுச் செயலராக போர்ச்சுகல் நாட்டின் மாஜி பிரதமர் ஆன்டோனியோ கட்டரஸ் பொறுப்பேற்றார்.
- ✓ ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலராக இருந்த பான்-கி-மூனின் பதவிக் காலம் டிசம்பர் 31ம் தேதியுடன்(31-12-16) முடிவடைந்தது. இதைத் தொடர்ந்து புதிய பொதுச்செயலராக போர்ச்சுகலின் மாஜி பிரதமரும் ஐ.நா.,வின் அகதிகள் அமைப்பின் முன்னாள் தலைவருமான ஆன்டோனியோ கட்டரஸ் முறைப்படி நேற்று(ஜன.,1) பொறுப்பேற்றார். 2021 டிசம்பர் 31ம் தேதி வரை அப்பதவில் கட்டரஸ் தொடருவார்.

**23] பாகிஸ்தான் சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதி அன்வர் ஜாகீர் ஜமாலி ஓய்வு பெற்றார். புதிய தலைமை நீதிபதியாக மியான் சாகிப் நிசார் நியமிக்கப்பட்டார். அவருக்கு ஜனாதிபதி மம்னூன் உசேன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.**

**24] ஒரே நாடு, இரண்டு நிர்வாகம் என்ற ஒப்பந்தத்தின் கீழ், ஹாங்காங்குக்கு சுதந்திரம் அளிப்பது என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்று சீனா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

**25] துருக்கி அரசியல் சட்டத்தில் திருத்தம் வரைவு மசோதாவுக்கு பாராளுமன்ற கமிஷன் ஒப்புதல்.**

**26] தேசிய பாதுகாப்பு படையின் அதிகாரபூர்வ வலைதளம் இன்று ஹேக் செய்யப்பட்டதுடன் பிரதமர் மற்றும் இந்தியாவுக்கு எதிரான செய்திகளை அனுப்பியுள்ளது கண்டறியப்பட்டது.**

- ✓ இதில் பாகிஸ்தான் தொடர்புடைய ஹேக்கர்கள் ஈடுபட்டிருக்க கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. இது பற்றி அதிகாரிகள் கூறும்பொழுது, ஹேக்கிங் முயற்சி இன்று கண்டறியப்பட்டவுடன், அதற்கான வலைதள முகவரியான www.nsg.gov.in உடனடியாக தீவிரவாத தடுப்பு படையினால் அதன் தலைமையகத்தில் வைத்து முடக்கப்பட்டது.

**27] பெரு நாட்டில் மிகப் பழமையான பிரமிட் ஒன்றை தொல்பொருள் ஆராய்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.**

- ✓ பெரு நாட்டில் உள்ள பள்ளத்தாக்கு ஒன்றில் மிகப் பழமை வாய்ந்த பிரமிட் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. சரியாக உருப்பெறாத இந்த பிரமிட், Incan பேரரசு அட்சிக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என கண்டறியப்பட்டுள்ளது. இதனருகில் பழைய கற்களால் ஆன கட்டிடங்களும் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் அங்கு மனிதர்கள் வாழ்ந்திருக்கலாம் என்ற கோணத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 28] இந்தியாவின் முதல் திருநங்கைகளுக்கான பள்ளி கேரளாவில் துவக்கம்

- ✓ இந்தப் பள்ளியை தமிழகத்தைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரும், திருநங்கையுமான கல்கி சுப்ரமணியம் திறந்து வைத்தார். நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆ்ஃப் ஓபன் ஸ்கூலிங் (National Institute of Open Schooling) அமைப்புடன் இணைந்து இந்த பள்ளி துவங்கப்பட்டுள்ளது.

- ✓ இந்த பள்ளி, பத்தாம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வுகள் எழுதாமல், பள்ளியில் இருந்து பாதியில் வெளியேறிய திருநங்கைகள் தங்கள் கல்வியை மீண்டும் தொடர உதவுகிறது. தற்போது இப்பள்ளியில் ஆறு திருநங்கைகள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த பள்ளியில் தங்கி பயிலும் வகையில் விடுதி வசதியும் செய்யப்பட்டுள்ளது. இந்த விழாவில் கலந்து கொண்டு பேசிய கல்கி சுப்ரமணியம், சமுதாயத்தில் திருநங்கைகள் ஒதுக்கப்படுவதாகவும், அவர்கள் பாலியல் மற்றும் பிச்சை எடுக்கும் தொழிலுக்குத் தள்ளப்படுவதாகவும் வேதனை தெரிவித்தார்.

### 29] ஹஜ் புனித யாத்திரை தொடர்பான நடவடிக்கைகளுக்கு "Haj Committee of India" என்ற பிரத்யேக செயலியை மத்திய சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சர் முக்தார் அப்பாஸ் நக்வி வெளியிட்டார்.

- ✓ ஹஜ் யாத்திரை விண்ணப்பம் மீதான நடவடிக்கைகள், முதல்முறையாக தற்போது டிஜிட்டல் மயமாக்கப்படுகிறது. "டிஜிட்டல் இந்தியா" திட்டத்தில் இதுவொரு முக்கிய முயற்சியாகும்.

### 30] இந்தியன் அஞ்சல் வங்கி ( Postal Bank )2017ம் ஆண்டு முதல் செயல்பாட்டிற்கு வர உள்ளது. தமிழகத்தில் ஜார்ஜ்டவுண் தபால்நிலையத்தில் முதல் தபால் வங்கி அமைய உள்ளது.

31] ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகள் பற்றிய தகவலை அறிய "School Managemnt Information System" தொடங்கியுள்ளது.

32] மின் துறையில் சாதனை புரியும் நபர்களுக்கான 10th ENERTIA விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

- ✓ National Hydroelectric Power Corporation தலைவர் மற்றும் மேலாண்மை அதிகாரி "Shri K M Singh" மின் மற்றும் ஆற்றலில் தனித்தன்மை வாய்ந்தோருக்கான நபர் விருதை பெற்றுள்ளார்.

33] வேலையில்லா நபரக்ளுக்கு மாதச் சம்பளம் வழங்கும் ஐரோப்பாவின் முதல் நாடு என்ற பெருமையை "பின்லாந்து" பெற்றுள்ளது.

34] இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் புதிய நிர்வாகிகளை தேர்வு செய்ய நியமிக்கப்பட்ட ஃபாலி எஸ். நாரிமனுக்கு பதிலாக மூத்த வழக்கறிஞர் அனில் திவான் என்பவரை நியமித்து சுப்ரீம் கோர்ட் இன்று [ 03.01.2017 ] உத்தரவிட்டுள்ளது.

35] இந்திய அரசே நடத்தும் ஆசியாவின் ஒரே மூலிகைப்பூங்கா

- ✓ ஆசியாவிலேயே அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரே மூலிகைப்பண்ணை நீலகிரி மாவட்டத்தில் உள்ளது.

36] அலுவலக மெயில்களுக்கு ஓய்வு நேரத்தில் பதிலளிக்க வேண்டாம்: பிரான்சில் புதிய சட்டம் அமல்

- ✓ அலுவலகத்தில் கூடுதல் பணிச்சுமை காரணமாக உலகம் முழுவதும் மரணமடைவோரின் எண்ணிக்கை, ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதனால் தொழிலாளர்கள் மன அழுத்தம், உறவு சிக்கல், உடல் சோர்வு உட்பட பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். இந்நிலையில் தொழிலாளர்கள் மனம் குளிரும் வகையில் பிரான்ஸ் அரசாங்கம் புதிய சட்டம் ஒன்றை இயற்றியுள்ளது.

- ✓ அதாவது அலுவலக நேரம் தவிர்த்து ஓய்வு நேரங்களில் தொழிலாளர்கள் தங்கள் அலுவலக மெயில்களுக்கு பதிலளிக்க வேண்டாம் என, பிரான்ஸ் அரசாங்கம் புதிய சட்டம் இயற்றியுள்ளது.ஜனவரி 1 முதல் அமலுக்கு வந்துள்ள இந்த சட்டத்துக்கு தொழிலாளர்கள் ஆதரவு தெரிவித்தாலும், அந்நாட்டு யூனியன் சங்கங்கள் இந்த சட்டத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

### 37] அபுதாபியில் Mubadala உலக டென்னிஸ் போட்டி : பெல்ஜியம் வீரரை ரஃபேல் நடால் தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றார்

### 38] சீனாவில் நடைபெற்ற, சர்வதேச அளவிலான இறகுப்பந்து போட்டியில், தமிழகத்தைச் சேர்ந்த மாணவர் வெண்கலப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

- ✓ சீனாவில் கடந்த மாதம், பள்ளி மாணவர்களுக்கான இறகுப்பந்து போட்டிகள் நடைபெற்றன. சர்வதேச அளவிலான இந்தப் போட்டியில், இந்தியா, சீனா, ஜப்பான், தைவான், ஹாங்காங் உள்ளிட்ட 13 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

- ✓ இந்தியா சார்பில், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலைச் சேர்ந்த மாணவன் ஆதவன் கலந்து கொண்டார். எட்டாம் வகுப்பு படிக்கும் இவர், இப்போட்டியில் திறமையாக விளையாடி மூன்றாம் இடம்பெற்று, வெண்கலப் பதக்கம் வென்றார்.

## 39] செவ்வாய் கிரகத்தில் வீடுகள்: நாசா அறிவிப்பு

- ✓ செவ்வாய் கிரகத்திற்கு செல்லும் விண்வெளி வீரர்கள், அங்கு நீண்ட நாட்கள் தங்கி ஆய்வு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர். இந்நிலையில் செவ்வாய் கிரகத்தின் வெப்பநிலை மற்றும் காஸ்மிக் கதிர்வீச்சு ஆகியவற்றின் ஊடுருவலை தடுக்க வேண்டியுள்ளது.

- ✓ எனவே செவ்வாய் கிரகத்தில் தங்கும் பொழுது, சுற்றுப்புற காரணிகளால் பாதிக்காமல் இருக்கும் வகையில் இருப்பிடம் உருவாக்க திட்டமிட்டுள்ளனர். செவ்வாய் கிரகத்தில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே இருப்பிடம் அமைக்க திட்டமிடப்பட்டது.

- ✓ இந்நிலையில் "The Mars Ice Home" என்ற நாவலில் குறிப்பிடப்பட்டுள்ள யோசனைகளை செயல்படுத்த முடிவு செய்துள்ளது. அதன்படி, மிகப்பெரிய டோனட் வடிவிலான இருப்பிடத்தை உருவாக்க வேண்டும். இது பனி படர்ந்த நிலையில் தண்ணீருடன் இருக்க வேண்டும்.

- ✓ எனவே இதனை செயல்படுத்துவது குறித்து பல்வேறு சாத்தியமான விஷயங்களை நாசா ஆய்வு செய்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 40] சோலாபூரில் சர்வதேச ஜவுளிக் கண்காட்சி

- ✓ சர்வதேச ஜவுளிக் கண்காட்சி மஹாராஷ்டிர மாநிலம் சோலா பூரில் ஜனவரி 5 முதல் 7-ம் தேதி வரை நடைபெற உள்ளது இக்கண்காட்சியை மஹாராஷ்டிர மாநில ஜவுளி அமைச்சகம் மற்றும் மபத்லால் ஃபேப்ரிக்ஸ் உடன் இணைந்து சோலாபூர் ஆயத்த ஆடை கபட் உத்பாடக் சங்கம் நடத்த திட்டமிட்டுள்ளது. இதில் நாடு முழுவதிலுமிருந்து 6,000 சில்லரை வர்த்தகர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**41] குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபானி இந்தியாவிலேயே முதல் லேசர் தொழில் நுட்பத்தை அடிப்படையாக கொண்ட சோதனைச் சாவடியை ஆரவல்லி மாவட்டத்தில் உள்ள ஷாம்லாஜி என்ற இடத்தில் தொடங்கி வைத்தார்.**

**42] Shraddha, Ghyansham Kumar Devansh chosen for 2016 Bharatiya Jnanpith Navlekhan Award. 2016 ஆம் ஆண்டுக்கான பாரதிய ஞானபீட நவ்லேகான் விருதுக்கு இந்தி எழுத்தாளர்கள் சாரதா மற்றும் Ghyansham குமார் தேவன்ஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.**

- ✓ Shraddha was selected for her short story 'Hawa Mein Phadphadati Chitthi' and Devansh was chosen for his poem 'Akash Mein Deh'.

**43] ஆந்திர அரசு என்டிஆர் ஆரோக்கிய ரக்ஷா திட்டம் [ NTR Arogya Raksha Scheme ] என்ற காப்பீட்டு திட்டத்தை தொடங்கியுள்ளது. தொடங்கி வைத்தவர் :--> ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு.**

- ✓ Andhra Pradesh Government has launched NTR Arogya Raksha Scheme to provide the medical treatment to the people below Above Poverty Line (APL) at Rs. 1200 premium per annum.

**44] சீனா- இங்கிலாந்து இடையே நேரடி சரக்கு ரயில் சேவை துவக்கம்**

- ✓ பொருளாதாரத்திற்கும், வர்த்தகத்திற்கும் வலு சேர்க்கும் விதத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு தொடர்ந்து நீண்ட தூர சரக்கு ரயில்களை சீனா அறிமுகம் செய்து வருகிறது. இந்த நிலையில், தற்போது இங்கிலாந்து நாட்டிற்கு நேரடி சரக்கு ரயிலை அறிமுகம் செய்துள்ளது.

- ✓ சீனாவின் ஸெஜியாங் [ Zhejiang ] மாகாணத்தில் உள்ள யுவு [ Yiwu ] நகரிலிருந்து லண்டன் மாநகருக்கு இந்த சரக்கு ரயில் சேவை துவங்கப்பட்டு இருக்கிறது. [ 02.01.2017 ] நேற்று யுவு நகரிலிருந்து முதல் சரக்கு ரயில் லண்டனுக்கு புறப்பட்டது.

- ✓ சீனாவிலிருந்து கஜகஸ்தான், ரஷ்யா, பெலாரஸ், போலந்து, ஜெர்மனி, பெல்ஜியம் மற்றும் பிரான்ஸ் ஆகிய பல தேசங்களை கடந்து லண்டன் மாநகரை அந்த ரயில் அடையும். யுவு மற்றும் லண்டன் நகரங்களுக்கு இடையிலான கிட்டத்தட்ட 12,000 கிமீ தூரத்தை [ 7400 மைல் ] 18 நாட்களில் கடக்க இருக்கிறது அந்த சரக்கு ரயில். யுவு நகரில் உற்பத்தி செய்யப்பட்டது.

- ✓ ஆயத்த ஆடைகள், சூட்கேஸுகள், வீட்டு உபயோக பொருட்கள் உள்ளிட்டவை அந்த ரயிலில் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ‘One Belt One Road’ (Silk Road).

### 45] பழைய 1 பவுண்ட் நாணயங்கள் செல்லாது: பிரிட்டன் அதிரடி

- ✓ பிரிட்டனில் தற்போது 1.3 பில்லியன் மதிப்பிலான நாணயங்கள் மக்களிடம் புழக்கத்தில் உள்ளது. இதில் 433 மில்லியன் மதிப்பில், 1 பவுண்ட் நாணயங்கள் அடக்கம். இவற்றில் போலி நாணயங்கள் அதிக அளவில் புழக்கத்தில் வந்துள்ளதல் பழைய ஒரு பவுண்ட் நாணயங்களுக்கு பதிலாக புதிய ஒரு பவுண்ட் நாணயங்களை வெளியிடவுள்ளது பிரிட்டன் அரசு.

- ✓ பழைய ஒரு பவுண்ட் நாணயங்கள் 1983 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டவை. புதிய நாணயங்கள் வரும் மார்ச் மாதத்தில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் பழைய நாணயங்களை வரும் அக்டோபர் மாதம் 15ம் தேதி வரை வங்கிகளில் கொடுத்து புதிய நாணயங்களை பெற்றுக்கொள்ளலாம் என பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது.

### 46] காற்று மாசுபாடு: நாட்டிலேயே கொல்கத்தாவில் தான் அதிகம்

- ✓ இந்தியாவைப் பொறுத்தவரையில் சமீபகாலமாக தலைநகர் டெல்லியில் அதிக அளவு காற்று மாசுபாடு ஏற்பட்ட நிலையில் தற்போது கொல்கத்தாவிலும் காற்று அதிக அளவில் மாசுபட்டுள்ளது.

- ✓ கடந்த ஆண்டு இந்தியாவின் ஐந்து பெரிய நகரங்கள் 14.8 மில்லியன் அளவுக்கு கரியமில வாயுவை வெளியிட்டுள்ளதாக கொல்கத்தா மாநகராட்சி தெரிவித்துள்ளது. இதில் கொல்கத்தாவில் மட்டும் 3.29 டன் அளவுக்கு வெளியாகியுள்ளது. கொல்கத்தாவை பொறுத்தவரை வாகனப் பயன்பாடுகள் மூலமாக 50%, தொழிற்சாலைகளில் இருந்து 48%, சமைப்பதினால் 2% மாசுபாடு ஏற்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ✓ மேலும் நகரத்தில் உள்ள 70 சதவிகிதம் மக்கள் காற்று மாசுபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 47] விற்பனையில் சாதனை புரிந்த சர்வாதிகாரி ஹிட்லரின் சுயசரிதை புத்தகம்

- ✓ சர்வாதிகாரி ஹிட்லரின் சுயசரிதையை விளக்கும் மெயின் காம்ப் புத்தகம் ஜெர்மன் நாட்டில் அதிக அளவில் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது.

### 48] சர்ச்சைக்குரிய தென் சீனக்கடலில் தனது முதல் விமானம் தாங்கி போர்க்கப்பல் மூலம் சீனா பயிற்சி

- ✓ தென் சீன கடல்பகுதி முழுவதும் தங்களுக்கே சொந்தம் என சீனா உரிமை கொண்டாடி வருகிறது. ஆனால் அதற்கு வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனே மற்றும் தைவான் ஆகிய நாடுகள் தங்களுக்கும் அந்த பகுதியில் பங்கு உண்டு என்று சீனாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

- ✓ அங்கு கட்டுமானப்பணிகளை மேற்கொள்ள சீனா முயற்சி செய்து வருகிறது. இதற்கு அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. சர்ச்சைக்குரிய இந்த பகுதியில் செய்கை தீவுகளை உருவாக்கியுள்ள சீனா, அங்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகளை குவித்துள்ளது. ரேடார் அமைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

- ✓ தென் சீனக்கடலில் விமானம் தாங்கி கப்பலில் போர்விமானமான ஜே.15 போன்றவற்றை இறக்கியும் கப்பலில் இருந்து கிளம்பச்செய்தும் தொடர்ச்சியாக சீன ராணுவம் பயிற்சியில் ஈடுபட்டது அங்குள்ள பிராந்தியத்தில் பதட்டத்தை அதிகரித்துள்ளது.சீனா தற்போது தனது இரண்டாவது விமானம் தாங்கிய போர்க்கப்பலை தயாரிக்கும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளது.

**49] நாடு முழுவதும் தூய்மை அடிப்படையில் [ Government launches Swachh Bharat Survekshan 2017 in 500 cities ] 500 நகரங்களை பட்டியலிடும் பணியை அரசு இன்று [ 04.01.2016 ] துவக்குகிறது.**

- ✓ சுத்தம் தொடர்பான தரங்களை ஊக்கப்படுத்த, நாடு முழுவதும் 500 நகரங்களில், சுகாதரம் தொடர்பாக 2017 ஆம் ஆண்டு தூய்மை ஆய்வு நடத்தப்படும். இந்த ஆய்வை இந்திய தர நிர்ணய குழு [ Quality Council of India (QCI) ] செய்யும். நகராட்சிகள், நேரடி கண்காணிப்பின் மூலம் பெறப்பட்ட தரவுகள், சுதந்திரமான மதிப்பீடுகள், குடிமக்களின் பதில்கள் உள்ளிட்டவைகளை இது நகரங்களில் ஆய்வு செய்யும். கழிவு சேகரிப்பு, தூய்மைபடுத்துதல் மற்றும் போக்குவரத்து, திறந்த வெளியில் மலம் கழிக்காத நிலைமை, தூய்மை இந்தியா திட்டத்தின் வலைதளத்தின் தகவல்கள், கல்வி மற்றும் நடத்தையில் மாற்றம், திறன்களை வளர்ப்பது ஆகியவைகளை இந்த குழு மதிப்பிடும்.

- ✓ மக்கள் தங்களது கருத்துக்களை 1969 என்ற எண்ணுக்கு மிஸ்ட் கால் கொடுத்தும், தூய்மை இந்தியா ஆய்வு வலைதளத்திலும் தெரிவிக்கலாம். தூய்மை இந்தியா ஆய்வு, 2016 ஆம் ஆண்டில் 73 நகரங்களில் நடத்தப்பட்டது.

இதில் சுமார் ஒரு லட்சம் மக்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

**50] வர்தா புயலால் பாதிக்கப்பட்ட சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள வடக்கு மாவட்டங்களில் உள்ள சேதத்தை அறிய மத்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட குழுவின் தலைவர் மத்திய உள்துறை அமைச்சகத்தின் இணை செயலர் PRAVEEN VASHISHTA.**

**51] ஐக்கிய அரபு எமிரேட்சில் , நடைபெற்ற முதலாவது மேற்கு ஆசிய யூத் செஸ் சாம்பியன்ஷிப் தொடரில் மும்பையை சேர்ந்த 2ம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவன் குஷ் பகத், ரேபிட் , பிலிட்ஸ் , ஸ்டேன்டர்டு பிரிவுகளில் முதலிடம் பிடித்து 3 தங்க பதக்கங்களை வென்றுள்ளார். இதன்மூலம் இத்தொடரில், மூன்று பிரிவிலும் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற புதிய வரலாறு படைத்துள்ளார்.**

**52] நேபாளத்தில் அரசியல் சாசன திருத்த மசோதாவுக்கு இருந்த தடைகளை அந்நாட்டு உச்சநீதிமன்றம் நீக்கிவிட்டது. அதிகாரப்பகிர்வைக் காரணம் காட்டி இந்த நடவடிக்கைக்கு இடைக்காலத் தடைபோடுமாறு கேட்டுக்கொண்ட மனுக்களை உச்சநீதிமன்றம் நிராகரித்தது.**

- ✓ அதிகார பகிர்வு கோட்பாடுகளின் அடிப்படையில், அரசியல் சாசனத்தை உருவாக்கும் சட்டமன்றத்தின் அதிகார வரம்பிற்கு தடை போடமுடியாது என்று தலைமை நீதிபதி Sushila Karki, நீதிபதி Ishwor Prasad Khatiwada ஆகியோர் அடங்கிய சட்ட அமர்வு கூறிவிட்டது. வழக்கறிஞர் ஒருவரும் வேறு ஐந்து பேரும் தனித்தனியாக தாக்கல் செய்திருந்த இரண்டு மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்ற அமர்வு, இந்த தீர்ப்பை வழங்கியது.
- ✓ எல்லை வரையறை, குடியுரிமை உட்பட மாதேசிகள் மற்றும் பழமைவாதக் குழுக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், கடந்த நவம்பர்

மாதம் நேபாள நாடாளுமன்றத்தில் இந்த அரசியல் சாசன திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது.

### 53] இந்தியாவின் 44-வது தலைமை நீதிபதியாக [ கொலிஜீயத்தால் நியமிக்கப்பட்ட ] ஜகதிஷ் சிங் கேஹார் பதவியேற்றார் [ 04..1.2017 ]

### 54] மனித உடலில் புதிய உறுப்பு கண்டுபிடிப்பு

- ✓ மனித உடலில் இது வரை மறைந்திருந்த புதிய உறுப்பு ஒன்றினை அயர்லாந்தின் உடற்கூறியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். உடற்கூறியல் ஆய்வின் உச்சகட்டமாக கருதப்படும் இந்த உறுப்பை பற்றி அறிந்து கொள்வோம்.
- ✓ உடற்கூறியல் வரலாற்றில் சுமார் 100 ஆண்டுகளாக மனித உடலில் மறைந்திருந்த புதிய உறுப்பு ஒன்றை அயர்லாந்தை சேர்ந்த உடற்கூறியல் ஆய்வாளர்கள் தற்போது கண்டுபிடித்துள்ளனர்.
- ✓ மனித உடலின் குடல் பகுதியை வயிற்றுடன் இணைக்கும் 'நடுமடிப்பு', (Mesentery) இத்தனை காலமாக பல்வேறு திசுக்கள் ஒன்றிணைந்த ஒரு அமைப்பாகவே கருதப்பட்டு வந்தது.
- ✓ இந்நிலையில், அயர்லாந்தை சேர்ந்த லிமெரிக் பல்கலைக்கழகத்தின் ஜெ.கேல்வின் கா.ஃப்பே என்ற ஆராய்ச்சியாளர் வயிற்றின் நடுமடிப்பு பகுதியானது, தொடர்ச்சியான உள்கட்டமைப்பினை கொண்டதொரு தனிஉறுப்பு என்று உறுதிப்படுத்தியுள்ளார்.மற்ற உறுப்புகளை போல் இதனை அணுகும் போது, இந்த உறுப்பு தொடர்பான நோய்களை வகைப்படுத்தி, அவற்றை குணப்படுத்துவது எப்படி என்ற ரீதியில் அடுத்தகட்ட ஆய்வுகளை மேற்கொள்ள முடியும்.

- ✓ உடலில் புதியதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள நடுமடிப்பு என்ற இந்த உறுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள தொடர்ச்சியான ஆய்வுகளின் முடிவிற்கேற்ப, இந்த புதிய உறுப்பின் இயக்கம் குறித்து இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள முடியும்.

- ✓ இதன் இயக்கம் குறித்த தகவல்கள் அறிந்து கொள்ளும்பட்சத்தில் வயிறு மற்றும் குடல் பகுதி சார்ந்து பல்வேறு நோய்களை எளிமையாக குணப்படுத்த முடியும் என ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## 55] அமெரிக்க பாராளுமன்ற பிரதிநிதிகள் அவை சபாநாயகராக பால் ரியான் மீண்டும் தேர்வு

- ✓ அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக போட்டியிட்ட டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றார். அமெரிக்க பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலிலும் குடியரசு கட்சி வேட்பாளர்களே பெருமளவில் வெற்றி பெற்றுள்ளனர்.

- ✓ இந்நிலையில், புதிதாக தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நேற்று பதவி ஏற்று கொண்டனர். பாராளுமன்ற பிரதிநிதிகள் அவைக்கான புதிய சபாநாயகரை தேர்ந்தெடுக்க நடைபெற்ற தேர்தலில் தற்போதைய சபாநாயகரான ஜனநாயக கட்சியை சேர்ந்த பால் ரியான் மற்றும் முன்னாள் சபாநாயகர் நான்சி பெலோசி ஆகியோர் போட்டியிட்டனர்.

- ✓ இவர்களில் புதிய சபாநாயகரை தேர்வு செய்வதற்காக நடைபெற்ற வாக்கெடுப்பில் பால் ரியான் 249 வாக்குகளையும், நான்சி பெலோசி 189 வாக்குகளையும் பெற்றனர். இதையடுத்து, பால் ரியான் மீண்டும் சபாநாயகரானார்.

## 56] அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்களாக 5 இந்திய வம்சாவழியினர் பதவி ஏற்றனர்

- ✓ அமெரிக்க பாராளுமன்றத்துக்கு கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இந்திய வம்சாவழியினரான கமலா ஹாரிஸ், ரோ கண்ணா, ராஜா கிருஷ்ணமூர்த்தி, துல்சி கப்பார்ட், பிரமிளா ஜெய்பால் ஆகியோர் நேற்று பதவி ஏற்று கொண்டனர். இவர்களில் ராஜா கிருஷ்ணமூர்த்தி 'பகவத் கீதை' யின் மீது கைவைத்து சத்திய பிரமாணம் செய்தார்.

- ✓ அமெரிக்காவில் வாழும் இந்தியர்களின் எண்ணிக்கை அந்நாட்டின் மக்கள்தொகையில் ஒருசதவீதமாக மட்டுமே உள்ள நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையான 100 உறுப்பினர்களின் இடத்தில் 5 இடங்களை இந்திய வம்சாவழியினர் பிடித்துள்ளது, குறிப்பிடத்தக்கது.

**57] திருப்பதியில் தொடங்கிய இந்திய அறிவியல் மாநாட்டில் பிரதமர் மோடி சென்னை டாக்டர் உள்பட 8 பேருக்கு சிறப்பு விருதுகளையும், நோபல் பரிசு பெற்றவர்களுக்கு தங்க பதக்கங்களையும் வழங்கி பாராட்டினார்.**

- ✓ இந்திய அறிவியல் மாநாடு அமைப்பின் முன்னாள் தலைவர் டாக்டர் அசோக் குமார் சக்சேனாவுக்கு அசுடோஷ் முகர்ஜி நினைவு விருது வழங்கப்பட்டது.

- ✓ மங்களூரு பல்கலைக்கழக பேராசிரியர் கே.பைரப்பா (சி.வி.ராமன் நூற்றாண்டு விருது),

- ✓ எய்ம்ஸ் டாக்டர் என்.ஆர்.ஜனார்த்தனன் (பேராசிரியர் எஸ்.கே.மித்ரா நூற்றாண்டு விருது),

- ✓ மணிப்பூர் பல்கலைக்கழக டாக்டர் அருண்குமார் (பீர்பல் சகானி நூற்றாண்டு விருது),

- ✓ சென்னை அப்பல்லோ ஆஸ்பத்திரி இருதயநோய் நிபுணர் டாக்டர் ஜே.சத்தியமூர்த்தி, ஓய்வு பெற்ற மேற்கு வங்காள தொழில்நுட்ப பேராசிரியர்

பி.பி.சாட்டர்ஜி, ஐதராபாத் பல்கலைக்கழக துணை வேந்தரான பேராசிரியர் அப்பாராவ் போடில், எஸ்.வி. பல்கலைக்கழக துணை வேந்தர் ஏ.தாமோதரன் (4 பேருக்கும் புத்தாயிரம் ஆண்டு விருது) ஆகியோரும் சிறப்பு விருது பெற்றனர்.

- ✓ இது தவிர, நோபல் பரிசு பெற்ற ஸ்டான்போர்டு பல்கலைக்கழக பேராசிரியர் வில்லியம் மொர்னெர் (அமெரிக்கா - வேதியியல்), பேராசிரியர் தகாகி கஜிதா (ஜப்பான் - இயற்பியல்), பேராசிரியர் எம்.யூனுஸ் (வங்காளதேசம் - அமைதி), பேராசிரியர் ஜீன் டிரோலி (பிரான்ஸ் - பொருளாதாரம்), பேராசிரியர் செர்ஜி ஹரோச்சி (பிரான்ஸ் - இயற்பியல்), பேராசிரியர் அடா இ யோனாத் (இஸ்ரேல் - வேதியியல்) ஆகியோருக்கு பிரதமர் மோடி தங்கப்பதக்கங்களை வழங்கினார்.

**58] இந்தியாவில் முதன்முறையாக கேரள மாநிலம் எர்னாகுளம் மாவட்டத்தின் திரிக்ககரா எனும் இடத்தில் திருநங்கைகளுக்கான தனிப்பள்ளி கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கப்பட்டுள்ளது.**

- ✓ சஹாஜ் இண்டர்நேஷனல் எனப் பெயரிடப்பட்டுள்ள இப்பள்ளியை திருநங்கைகளுக்கான செயற்பாட்டாளர், எழுத்தாளர் மற்றும் நடிகை கல்கி சுப்பிரமணியம் திறந்து வைத்தார். தேசிய திறந்தநிலை கல்வி மையத்துடன் (National Institute of Open Schooling) இந்தப் பள்ளி இணைந்து செயல்படும் எனவும், திருநங்கைகள் படிப்பை பாதியில் கைவிடுவதை குறைப்பதற்காக தொடங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.
- ✓ இந்தப் பள்ளியில் பயிலுபவர்கள் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வுகளை நேரடியாக எழுத முடியும். மேலும் இங்கு தையற்கலை, இயற்கை வேளாண்மை, ஆளுமைத் திறன் ஆகிய பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ தொடக்க விழாவில் பேசிய கல்கி சுப்பிரமணியம் “ இந்நாள் என் வாழ்வில் சிறந்த நாள், இப்பள்ளி திருநங்கைகள் வாழ்வில் நல்ல மாற்றங்களை கொண்டு வரும். கல்வியால் மட்டுமே திருநங்கைகள் வாழ்க்கையில் தன்னம்பிக்கை, அறிவு ஆகியவற்றை தர முடியும் என்பதால் நாட்டில் உள்ள

மற்ற மாநிலங்களிலும் இதேபோன்ற பல பள்ளிகளை தொடங்க முன்வர வேண்டும்' எனக் கூறினார்.

## 59] பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட்: கேப்டனாக மிதாலிராஜ் நியமனம்

- ✓ பெண்கள் உலக கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான தகுதி சுற்று கொழும்பில் அடுத்த மாதம் (பிப்ரவரி) 3-ந் தேதி தொடங்குகிறது. இந்த போட்டிக்கான இந்திய பெண்கள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணியின் கேப்டனாக 34 வயதான மிதாலிராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

## 60] உலகை மாற்றிய சாதனையாளர்கள் பட்டியலை போர்ப்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் 30 க்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளியினர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் 30 வயதிற்கு உட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- ✓ போர்ப்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ள 30 பேர் சுகாதாரம், உற்பத்தி, விளையாட்டு, வர்த்தகம் உள்ளிட்ட 20 துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகும். இவர்கள் அனைவரும் தங்களின் துறைகளில் அடுத்த தலைமுறைக்கு பயன்படும் வகையில், புதிய கண்டுபிடிப்புக்கள், கல்விமுறைகள் உள்ளிட்டவைகளை மேற்கொண்டவர்கள் ஆவர்.

- ✓ போட்டோதெரபி டிவைஸ்களை பயன்படுத்தி மஞ்சள் காமாலை, ஹைபோதெரமியா ஆகிய நோய்களை குணப்படுத்தும் முறையை கண்டுபிடித்த நியோலைட் நிறுவனத்தின் நிர்வாகிகளில் ஒருவரான விவேக் கோப்பர்தி(27), அவசர காலத்தில் மருந்துகளை கொண்டு செல்ல டிரோன்களை பயன்படுத்தும் முறையை உருவாக்கிய பிரார்த்தனா தேசாய் (27), மொபைல் ஆப்ஸ்களை பயன்படுத்தி அறுவை சிகிச்சை தொடர்பாக ஒரு டாக்டர் மற்றொருவரிடம் ஆலோசிக்கும் வகையிலான தொழில்நுட்பத்தை ஏற்படுத்தி

ஷான் பட்டேல் (28) உள்ளிட்டோர் போர்ப்சின் சாதனையாளர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

### 61] உயர் கல்வி நிறுவனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு 5 சதவீத இட ஒதுக்கீடு: அடுத்த கல்வியாண்டு முதல் அமலாகிறது

### 62] 2030-ம் ஆண்டில் இந்தியா அறிவியல் தொழில்நுட்பத்தில் 3-வது சிறந்த நாடாக விளங்கும்: பிரதமர் மோடி

- ✓ விஞ்ஞானிகளுக்கு அரசு முழு ஆதரவளிக்க கடமைப்பட்டுள்ளது. நிதி ஆயோக் நாட்டுக்காக முழுமையான அறிவியல் தொழில்நுட்ப தொலைநோக்குப் பார்வையை உருவாக்கி வருகிறது. கடந்த அறிவியல் மாநாட்டில் வெளியிட்ட 2035 அறிவியல் தொலைநோக்குப் பார்வை தற்போது 12 முக்கிய தொழில்நுட்ப துறைகளுக்கான விரிவான வரைபடமாக உருவாக்கப்பட்டுள்ளது.

- ✓ இந்திய தீபகற்பத்தை சுற்றியுள்ள நதிநீர், மற்றும் பரந்த கடற்கரைப் பகுதிகள் ஆகியவை 2.4மில்லியன் சதுர கிமீ பொருளாதார மணடலத்தை வழங்குகிறது. நீடித்த எதிர்காலத்திட்டத்தில் கடல்பொருளாதாரம் முக்கிய பரிமாணமாக விளங்குகிறது. புவி அறிவியல்கள் அமைச்சகம் ஆழ்கடல் ஆய்வில் இந்த ஆதாரங்களை பொறுப்பான முறையில் பயன்படுத்தும் பணியை ஆய்வு செய்து வருகிறது.

- ✓ தொழில்நுட்ப அறிவை புதுமைகளைக் கண்டுபிடிப்பதற்கான கருவிகளாக மாற்ற வேண்டும். 2030-ம் ஆண்டில் இந்தியா அறிவியல் தொழில்நுட்பத்தில் 3 டாப் நாடுகள் பட்டியலில் இருக்கும். நம் மக்களின் அதிகரிக்கும் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப விஞ்ஞானம் வளர்ச்சிபெறுதல் அவசியம்.

63] பேடிஎம் நிறுவனம் பேமென்ட் வங்கி தொடங்குவதற்கு முழுமையான அனுமதியை ரிசர்வ் வங்கி வழங்கி இருக்கிறது என பேடிஎம் நிறுவனத்தின் நிறுவனர் விஜய்சேகர் சர்மா தன்னுடைய வலைபதிவில் கூறியிருக்கிறார்.

64] ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநராக சுரேகா மராண்டி நியமிக்கப்பட்டுள்ளார். நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்புத் துறை, நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத் துறை ஆகிய துறைகளை இவர் பார்த்துக்கொள்வார்.

65] 104-ஆவது இந்திய அறிவியல் மாநாடு ஆந்திர மாநிலம், திருப்பதியில் ஜனவரி 3ல் தொடங்கியது. தொடர்ந்து 5 நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிவியல் அறிஞர்களும், நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளும் பங்கேற்றுள்ளனர்.

- ✓ சர்வதேச ஆய்வுக் கட்டுரைகளின் ஆவணத் தகவல் பெட்டகமாக விளங்கும் "ஸ்கோபஸ்' , அறிவியல் ஆராய்ச்சிகள் மற்றும் வளர்ச்சி தொடர்பான தரவரிசையில் இந்தியா உலக அளவில் ஆறாவது இடத்தில் இருப்பதாக தெரிவித்துள்ளது.

66] இந்தியாவில் விளைவிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும் மாம்பழங்கள், பாகற்காய், புடலங்காய், கத்திரிக்காய் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு, ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பு கடந்த 2014-ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆண்டுகளுக்கு தடை விதித்தது.

- ✓ இவற்றினை விளைவிக்கும்போது பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்றவை அதிகளவில் இருப்பது தெரிந்ததையடுத்து, இந்நடவடிக்கையை ஐரோப்பிய யூனியன் மேற்கொண்டது.

- ✓ கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பு கூட்டத்தில், இந்திய காய்கறிகள் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டது. அதன்படி, இந்திய காய்கறிகள் மீதான தடையை ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பு தற்போது நீக்கிக் கொண்டுள்ளது.

67] பாகிஸ்தான் ராணுவ தளபதி ஜெனரல் காமர் பாஜ்வா மற்றும் Joint Chiefs of Staff Committee தலைவர் ஜூபைர் ஹயத் ஆகியோருக்கு அந்நாட்டின் அதிபர் மமூன் ஹூசைன் , அந்நாட்டின் உயரிய விருதான Nishan-e-Imtiaz ஐ வழங்கி கவுரவித்துள்ளார்.

68] ஹரியானா மாநில அரசு 100 கிராமங்களுக்கு WiFi வசதி ஏற்படுத்தியுள்ளது.

69] Startup நிறுவனங்களுக்கான " அறிவுக்களஞ்சியம் " ( Knowledge Warehouse ) குருகிராமில் ( குர்ஹவன் ) ஏற்படுத்தப்படும் என அறிவித்துள்ளது.

70] மாவட்ட தலைநகரங்களில் e - disha என்ற பெயரிலும் , ஊரக பகுதிகளில் பொது சேவை மையங்கள் { Common Service Centres (CSCs) } என்ற பெயரிலும் செயல்பட்டு வந்த e சேவை மையங்கள் அனைத்தும் " அடல் சேவா கேந்திரா " என பெயர் மாற்றம் செய்யப்படுவதாக ஹரியானா முதல்வர் அறிவித்துள்ளார்.

71] குஜராத் மாநிலம் அகமாதாபாத்தில் “சபர்மதி ஆற்றுபடிநில பூக்கள் பூங்கா” வை(Sabarmati Riverfront Flower Park) அம்மாநில முதல்வர் விஜய் ரூபானி திறந்து வைத்தார்.

72] பாரா ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற “தீபா மாலிக்” (Deepa malik) மற்றும் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் உடல் உறுப்பு நீக்கப்பட்ட(Amputee)

மலையேறும் பெண் “அருனிமா சின்கா” (Arunima sinha) இருவரும் “New Delhi Municipal Council(NDMC) தூய்மை இந்தியா” திட்டத்தின் தூதராக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

73] சிறு கடல்வாழ் உயிரினங்களை பாதுகாக்கும் வகையில் மீன்பிடிப்பின் போது சுருக்குவலை எனப்படும் “purse seine” வலைகளுக்கு மஹாராஷ்ட்ரா மாநில அரசு மாநிலம் முழுவதும் தடை செய்து உத்தரவிட்டுள்ளது.

74] Association of British Travel Agents (ABTA) கணக்கெடுப்பின்படி கேரளா “சுற்றிப்பார்க்க கூடிய தளமாக” (Destination to Watch) 2017ம் ஆண்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

75] 2017 ஆம் ஆண்டை சர்வதேச நிலையான சுற்றுலா வளர்ச்சி வருடமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. The theme has been given to increase awareness on the contribution of sustainable tourism to development, especially among the public and the decision makers of the public and private sector while mobilizing all stakeholders to work together in making tourism a channel for positive change.

76] புத்தாண்டு முதல் வாரத்திலே பூமிக்கு மிக அருகில் கடக்கவுள்ள வால் நட்சத்திரம்

- ✓ புத்தாண்டு தொடக்கத்தில் பூமிக்கு மிக அருகில் வால் நட்சத்திரம் ஒன்று கடந்து செல்ல உள்ளதாக நாசா விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ✓ ஜனவரி மாதம் முதல் வாரத்தில் C/2016 U1 NEOWISE எனப் பெயரிடப்பட்டுள்ள வால் நட்சத்திரம் பூமிக்கு மிக அருகில் கடந்து செல்லும் என விண்வெளி ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். NEOWISE என்ற தொலைநோக்கியின் மூலம் இந்த வால் நட்சத்திரம் கண்டறியப்பட்டுள்ளது.

- ✓ எரிக்கல் மற்றும் வால் நட்சத்திரங்களின் பயணங்கள் குறித்து ஆய்வு செய்ய NEOWISE என்ற தொலைநோக்கியை விண்வெளிக்கு நாசா அனுப்பியது. இதன் ஆய்வின்படி ஜனவரி முதல் வாரத்தில் பூமிக்கு மிக அருகில் வால் நட்சத்திரம் ஒன்று கடந்து செல்ல உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த வால் நட்சத்திரமானது மிகவும் பிரகாசமாக இருக்கும் எனவும் பைனாக்குலர் கருவி மூலம் காணமுடியும் எனவும் நாசா விண்வெளி ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### 77] ஆன்-லைன் மூலம் கேஸ் பதிவு செய்தால் 5 ரூபாய் சலுகை

- ✓ ஆன்-லைன் மூலம் எரிவாயு சிலிண்டர் பதிவு செய்து பணம் செலுத்தினால் 5 ரூபாய் சலுகை வழங்கப்படும் என்று எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன. நெட் பேங்கிங், கிரெடிட் மற்றும் டெபிட் கார்டுகள் மூலம் வாடிக்கையாளர்கள் பணம் செலுத்தலாம்.
- ✓ டிஜிட்டல் பணவர்த்தனையை ஊக்குவிக்கும் வகையில் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 78] கொல்கத்தா அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக எல்.பாலாஜி நியமனம்

- ✓ இந்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக சென்னையை சேர்ந்த எல்.பாலாஜி நியமிக்கப்பட்டுள்ளார்.

### 79] மின்உற்பத்தி நிலையத்தில் இருந்து விநியோகம் செய்வது வரையிலான , மின்கடத்துதல் மற்றும் விநியோகத்தில் , குறைவான அளவிலான சேதாரத்துடன் சிறப்பான மின்விநியோகத்தை மேற்கொண்டதற்கான அகில இந்திய விருதை பஞ்சாப் மாநில மின் கழகம் ( Punjab State Power Corporation Ltd ) பெற்றுள்ளது.

**80] தனிநபர் பெறும் வருமானத்தில், சராசரி அளவில் இந்தியாவில் டெல்லி முதலிடத்தில் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.**

- ✓ நாடு முழுவதும் தனிநபர் வருமானம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் தலைநகர் டெல்லி 2015-16ஆம் ஆண்டில் ரூ.2,80,000 சராசரி வருமானத்துடன் முதலிடத்தில் உள்ளது. இது தேசிய சராசரியை விட மூன்று மடங்கு அதிகம்.
- ✓ சண்டிகர் ரூ.2,42,386 மற்றும் சிக்கிம் ரூ.2,27,465 தனிநபர் வருமானங்களுடன் 2வது, 3வது இடங்களில் உள்ளன. டெல்லியின் நடப்பாண்டில் தனிநபர் சராசரி வருமானம், கடந்த ஆண்டை விட ரூ.28,000 அல்லது 13% அதிகம் ஆகும்.
- ✓ தேசிய அளவில் 2015-16ஆம் ஆண்டின் தனி நபர் வருமான சராசரி ரூ.93,293 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.